aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com aanmeegamalar.com

aanmeegamalar.com வெளியிடும்

e-magazine

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

தீபாவளி சிறப்பு மலர்

3





சாந்தாஸ்
சில்க்ஸ்
அழகின் கம்பீரம்...
PURE HANDLOOM SILK SAREES MANUFACTURER
K.K. நகர், மதுரை. 90874 20005

மதுரையின் MMTC-PAMP அங்கீகரிக்கப்பட்ட முன்னுரிமை நிறுவனம்
ஸ்ரீ ஜெயபிரபா
ஜுவல்லர்ஸ் (பி) லிட்
வழங்குகிறது
பழசுக்கு... புதுசு!
MMTC-PAMP
Swiss Excellence. Made in India.
நீங்கள் வழங்கும் பழைய தங்க நகைகளின் எடை மற்றும் தூய்மை (Karat) துல்லியமாகச் சரிபார்க்கப்பட்டு, அதன் மதிப்பிற்கேற்ப 24 KARAT MMTC-PAMP தூய தங்கமாக மாற்றிக்கொள்ளும் சிறப்பான வாய்ப்பு!.

K.V.K.R & Sons
Exclusive Silver Hall Mark Show Room
நாளெல்லாம் பொன்னாளாக...!

100% HUID JEWELLERY
ஸ்ரீ ஜெயபிரபா
ஜுவல்லர்ஸ் (பி) லிட்
தங்கம் | வெள்ளி | வைரம் | பிளாட்டினம்
258, தெற்கு ஆவணி மூல வீதி, மதுரை - 01.
PH : 0452 - 4979181, 0452 - 4979182, 94430 26921

மருத்துவத் துறையின் பிதாமகன்
ஸ்ரீ தன்வந்திரி பகவான்

நோயில்லாத வாழ்வுக்காக நாம் வழிபட வேண்டிய விசேஷ தெய்வம் ஸ்ரீ தன்வந்திரி பகவான்.

இவர் மகாவிஷ்ணுவின் அவதாரம்.

தேவர்களுக்குப பூரண வாழ்வை வழங்குவதற் காகத் திருப்பாற்கடல் கடையப்பட்டது அபோது கடலில் இருந்து காமதேனு ஐராவதம்கௌஸ் துபமணி மகாலஷ்மி போன்ற மங்கலமான அம்சங்களுடன் தன்வந்திரி பகவானும் அவ தரித்தார் என்று புராணங்கள் கூறும்.


இவர் தன திருக்கரத்தில் வைத்திருக்கும் கலசத்தில் இருந்து வழங்கிய அமிர்தத்தை உண்ட தனால்தான் தேவர் கள் பூரண ஆயுளைப் பெற் றார்கள். எனவே தன்வந்திரி பகவானை மருத்துவத் துறையின் பிதாமகன் என்பர்.

எந்த ஒரு தீராத நோய்க்கும் உடல் சம்பத்தப்பட்ட கோளாறுகளுக்கும் தன்வந்திரி பகவானை வழிபட்டு அவ ரது பிராச்சத்த்தைப் பெற்று உண்டால் நிவாரணம் பெறலாம் என்பது கண் கூடு.

அவருக்கு அபிஷேகம் செய்து அந்தத் தீரித்தத்தை உட்கொள்ள லாம். தவிர தன்வந்திரிபகவான் பிரத்தியேகமாக எழுந்துளியிருக் கும் சில ஆலங்களில் கிடைப்பதற்கு அறிய மூலிகைகளைக் கொண்டு தாயாரிக்கப்பட்ட லேகியம் போன்ற வைகளை பிரசாதமாக தருகிறார்கள்.

சிறந்த பண்டிதர்களை வைத்து வீட்டிலேயே தன்வந்திரி ஹோமம் செய்யலாம். பிரம்மன் நான்கு வேதங்களையும் படைத்து அதன் சாரமாகிய ஆயுர் வேதத்தையும் படைத்தான், இந்த ஆயுர்வேதம் நன்றாகத் தழைத்தோங்கி பலரையும் அடைய வேண்டுமென முதலில் சூரிய பகவானுக்கு உபதேசித்தார்.

சூரிய பகவானிடம் இருந்து ஆயுர்வேத்த்தைக் கற்றுத் தேர்ந்த பதினாறு மாணவர்களில் மிகவும் முக்கியமானவர் தன்வந்திரி என்று பிரம்ம வைவர்த்த புராணம் சொல் கிறது.



தன்வந்திரி என்று சொல்லப்படுபவர் வானத்தில் வசித்து வருபவர். அதாவது சூரிய பகவானே தன்வந்திரி என்றும் புராணங்களில் ஒரு குறிப்பு உள்ளது.

அதனால் ஞாயிறு மற்றும் வியாழக் கிழமைகளில் இவரை வழிபடுவதுநல்லது. தன்வந்திரிதான் ஆயுர்வேதத்தை சிருஷ்டித் தார் என்கிறது மத்ஸ்ய புராணம்.

இவரை வைத்திய ராஜா ஆதர்ச மருந்துவர் இன்றும் குறிப்பிடுகிறது.

இவர் சுருண்டு காணப்படும் மென்மை யான திருமுடி செவ்வரியோடிய கண்கள் வெண்சங்குக் கோடுகளுடன் கூடிய கழுத்து பரந்த மார்பு பட்டுப் பீதாம்பரம் மலர்மாலைகள் தரித்த ஆபரணத் திருமேனி நான்கு திருக்கரங்கள் மேல் இரு திருக்கரங்களில் சங்கு சக்கரம் தரித்து காணப்படுவார்.

கீழ் இரு திருக்கரங்களில் ஒன்றில் அட்டைப் பூச்சியையும் மற்றொன்றில் அம்ருத கலசத் தையும் தாங்கிக் காணப்படுவார்.

ஸ்ரீ தன்வந்திரி பீடத்தில் உள்ள பகவான் அட்டைப் பூச் சிக்கு பதிலாக "சீத்தில்" என்ற மூலிகைக் கோடியை ஏந்தியபடி காணப்படுகிறார்.

துளசி ஆலிலை அரசு இலை வில்வம் விஷ்ணுகிராந்தி நாயுருவி மருக்கொழுந்து பூர்ஜ இலைதேவ தாரு இலை போன்ற இலைகளும் செவ்வந்தி சண்பகம் பிச்சி பாரிஜாதம் தாமரை அரளி புன்னைப்பூ மந்தாரைபோன்ற பூக்களும் இவரது பூஜைக்கு உரியவை மகாவிஷ்ணுவுக்குப் பிடித்தமான கோதுமை அல்வா அல்லது சுக்குவெல்லம் செய்து தன்வந்திரிக்கு நைவேதிப்பது சிறந்தது.

மதுரை ஒத்தக்கடை யோக நரசிம்மரின் ரகசியம்



மதுரைக்கு அருகில் உள்ள யானை மலை ஒத்தக்கடையில் அமைந்துள்ள அருள்மிகு யோக நரசிம்மர் திருக் கோவில், இந்தியாவிலேயே மிகத் தொன்மையான குடைவரைக் கோயில் களில் ஒன்றாகும். இது கி.பி. 8ஆம் நூற்றாண்டில் பாண்டிய மன்னர்களின் காலத்தில் மலையைக் குடைந்து உரு வாக்கப்பட்டது.

சிறப்புத் தோற்றம்:

இந்த மலை இயற்கையாகவே ஒரு படுத்திருக்கும் யானையின் தோற்றத் தில் காட்சியளிப்பதால் 'யானைமலை' என்று அழைக்கப்படுகிறது. இக்கோவி லின் மூலவர் யோக நரசிம்மர், நின்ற நிலையிலோ அமர்ந்த நிலையிலோ அல்லாமல், யோக முத்திரையில் மிக உக்கிரமும் சாந்தமும் கலந்த ரூபத்தில் மலையின் பாறையிலேயே குடையப்பட்டு உருவாக்கப்பட்டுள்ளார்.

சிற்பக்கலை:

பல்லவ மற்றும் பாண்டியகாலக் குடைவரைக் கலைக்குச் சிறந்தசான் றாக விளங்கும் இக்கோவிலில்,அழ கிய தூண்களும், கல்வெட்டுகளும் வரலாற்றுச் சிறப்பைப் பறை சாற்று கின்றன.

கோவிலின் சிறப்புகள்

சுயம்பு மற்றும் குடைவரைத் திரு மேனி: ஒரே பாறையில் செதுக்கப்பட்ட மூலவரான யோக நரசிம்மர் சுமார் 8 அடி உயரத்துடன் கம்பீரமாகக் காட்சி யளிக்கிறார்.

நரசிம்மரின் உற்சவ மூர்த்திகளுடன், அலமேலு மங்கைத் தாயார் சன்னதி யும் இங்கு தனிச்சிறப்புடன் அமைந் துள்ளது.

புராணப் பெருமை: திருமாலின் உக்கிர அவதாரமான நரசிம்மர் இரண் யனை வதம் செய்த பிறகு, தன் உக் கிரத்தைத் தணித்துக் கொள்ளத் தவமிருந்த தலம் இது என்பது ஆன் மீக நம்பிக்கையாகும்.

தரிசன பலன்கள்

பயம் மற்றும் தடைகள் நீங்குதல்: யோக நரசிம்மரை வழிபடுவதால் வாழ்வில் ஏற்படும் திடீர் பயங்கள், எதிரிகளின் தொல்லைகள், மற்றும் அனைத்து வகையான ஜோதிட தோஷங்களும் விலகும்.

மன அமைதி, ஸ்திரத் தன்மை:

யோக நிலையில் அமர்ந்தி ருக்கும் இவரைத் தரிசிப்பதால் மனக் குழப்பங்கள் நீங்கி, மன அமைதியும் மனவலிமையும் பெருகும்.

தொழில் மற்றும் கல்வி வளம்: இத்தலத்து இறைவனை மனதாரப் பிரார்த்தனை செய்ய தொழிலில் உள்ள தடைகள் விலகி முன்னேற்றம் உண்டாகும், கல்வியில் சிறந்து விளங்க அருள் கிடைக்கும்.





aanmeegamalar.com

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

www.aanmeegamalar.com

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

படியுங்கள்...
aanmeegamalar.com
இதுவரை வெளிவந்த
185 e-book
கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

கோவில்களில் கொண்டாடப்படும் தீபாவளி





கி.பி.16ம் நூற்றாண்டில் கோயில்களில் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு சிறப்பு வழிபாடு நடைபெற்றுள்ளது என்பது திருமலை திருப்பதி வேங்கடவன் கோயிலில் உள்ள தமிழ்கல்வெட்டு ஒன்றில் கூறப்பட்டுள்ளது என்று வரலாற்று ஆய்வாளர் குடவாயில் எம்.பாலசுப்ரமணியன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது: திருமலை திருப்பதி வேங்கடவன் கோயிலில் கி.பி.1542 ம் ஆண்டு தமிழில் பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்றில், 'திருப்பதி வேங்கடவனுக்கு தீவாளி நாள் அதிரசப்படி இரண்டு' என்ற அமுது படையல்கட்டளை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன்படி, 478 ஆண்டுகளுக்கு முன்பு தீபாவளி பண்டிகை நாளில் இறைவனுக்கு அதிரசம் படையல் வைத்து வழிபாடு நடந்துள்ளதை அறிய முடிகிறது.

இதேபோல, திருவாரூர் மாவட்டத்தில் உள்ள சித்தாய்மூர் சிவன் கோயில் இறைவன் பொன்வைத்த நாதருக்கு ஆண்டுதோறும் தீபாவளி நாளில் சிறப்பு அபிஷேகம் செய்வதற்காக அப்பகுதியில் உள்ள பல்வேறு கிராமமக்களும், அரசு அலுவலர்களும் சேர்ந்து தாங்கள் பெறும் கூலியில் இருந்து, ஒரு சிறு தொகையை அளித்துள்ளனர். இது, தீபாவளி அபிஷேக விழா என கி.பி.1753ம் ஆண்டு டிச.7ம் தேதி எழுதப்பெற்ற ஒரு செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த செப்பேட்டில் உள்ளபடிசித்தாய்மூர் மாகாணத்தின் நத்தப்பள்ளம், பள்ளியமூலை, பனங்காடி, சூரமங்கலம், உத்திரங்குடி, மடப்புரம், பள்ளிச்சந்தம், கோமளக்கோட்டை, கூமூர், நெடுஞ்சேரி, செம்பியமணக்குடி, முள்ளிகுடி, சிங்களாந்தி, முத்தரசநல்லூர் உள்ளிட்ட 26 ஊர்களைச்சேர்ந்தவர்கள் சாதி வேறுபாடின்றி சித்தாய்மூர் பொன்வைத்த நாதருக்கு தீபாவளி அபிஷேகம் உள்ளிட்ட விழாக்களை நடத்தியுள்ளனர் என்பதும், இக் கோயிலுக்காக இலுப்பை, தென்னைஉள்ளிட்ட மரங்களை நட்டும்தொண்டு புரிந்துள்ளனர் என்பதை அந்த செப்பேடு தெரிவிக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

வட இந்தியாவில் தீபாவளி பண்டிகை ஐந்து அல்லது ஆறு நாட்கள் கொண்டாடப்படுகிறது. மத்தியபிரதேச மாநிலத்தில், "மால்வா பகுதியில் ரத்லாம் மாவட்டத்தில் ரத்லாம் நகரின் மத்தியில் அமைந்துள்ள லக்ஷ்மன்புரா பகுதியில் மானக் சௌக் " என்ற இடத்தில் அமைந் துள்ளது ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோயில்

இந்த பகுதி இந்தியாவில் 24 கேரட், தங்க வணிகத்திற்கு பெயர் பெற்ற ஊர்ஆகும். தங்கமும்" நவரத்தினமும் பிரபலமாக இருக் கும் இந்த நகரை ரத்தினபுரி என்றும் அழைக்கிறார்கள்.

நாடு முழுவதும் கோயில்களில் பிரசாதமாக திருநீறு குங்குமம் மஞ்சள் சந்தனம் மலர்கள் வழங்குவதை வழக்கமாக கொண்டுள்ளார்கள்.

ஆனால்!! இங்குள்ள.. ஸ்ரீ மஹாலக்ஷ்மி கோயிலில் மட்டும்.. தீபாவளி நாளில் தரிசனம் செய்ய கோயிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கம் வெள்ளி நாணயங்களை பிரசாதமாக வழங்குகிறார்கள்!!

பக்தர்கள் காணிக்கையாக செலுத்திய தங்க, வெள்ளி ஆபரணத்தின் ஒரு பகுதியை தீபாவளி நாளில் பக்தர்களுக்கு, பிரசாதம் என்று கோயில் நிர் வாகம் வழங்கி வருகிறது!

இது தவிர இன்னம் ஒரு அதியசமும் இந்த கோயிலில் நடைமுறையில் உள்ளது. அதாவது தீபாவளிக்கு முன் பாகவேபக்தர் கள் தங்கள் வீடுகளில் உள்ள தங்கம், வைரம், வெள்ளி ஆபரணங்களைகோயிலில் கொண்டு கொடுத்து இன்னன்னபொருள்கள் கொடுத்துள்ளோம் என ரசீது பெற்று கொள் கிறார்கள்! அதனை கோயில் நிர்வாகம் பெற்று பாதுகாப்பாக அவரவர் பெயர் பதித்து... அந்த ஆபரணங்களை கொண்டு ஸ்ரீ மஹா லக்ஷ்மியை தீபாவளி நாளில் அலங்கரிக்கிறார்கள்.



நான்கு யுகங்களாக பக்தர்களுக்கு அருள்புரியும்

ஸ்ரீ கூடல் அழகர் பெருமாள்



ஐந்து கலசத்துடன் கூடிய ஐந்து நிலை ராஜகோபுரம்,எட்டுப்பிரகாரங்கள், ஆண்டாள், சக்கரத்தாழ்வார், நவக்கிர காதியர், ஆழ்வார்கள், ஆச்சாரியர்கள், மணவாள மாமுனிகள், விச்வக்சேனர், ராமர், கிருஷ்ணர், லட்சுமி நாராயணர், கருடன், ஆஞ்சநேயர், லட்சுமி நரசிம்மர் ஆகியோரின் சன்னதிகளுடன் மதுரை யில் அமைந்துள்ளது கூடலழகர் பெரு மாள் கோயில்.

108 வைணவத் திருத்தலங்களில் ஒன்று. இதற்கு ஆழ்வார் பாடல்கள் உள்ளன. இக் கோயிலின் கருவறையில் உள்ள பெருமாள் பெயர் 'கூடலழகர்'. மாடத்தில் பள்ளிகொண்டிருக்கும் கோலம்அந்தர வானத்து எம்பெருமான் என்னும் பெயருடையது.

அஷ்டாங்க விமானத்தின் கீழ்தளத் தில் கூடலழகர் அமர்ந்த கோலத்திலும், இரண்டாவது தளத் தில் சூரிய நாராயணர் நின்ற கோலத்திலும் மூன்றாவது தளத் தில் பாற்கடல் நாதர் பள்ளிகொண்ட கோலத்திலும் காணப் படுகிறார். உற்சவர் வியூக சுந்தர்ராஜப் பெருமாள்.

பிரம்மாவின் புத்திரரான சனத்குமாரருக்கு, பெருமாளை அர்ச்சாவதார (மனித ரூபம்) வடிவில் தரிசிக்க வேண்டுமென ஆசை எழுந்தது. தன் விருப்பம் நிறைவேற,இத்தலத் தில் பெருமாளை வேண்டி தவமிருந்தார்.

சுவாமி ஸ்ரீதேவி, பூதேவியுடன் அவருக்குக் காட்சி தந்தார். பின்பு சனத்குமாரர், தேவசிற்பி விஸ்வ கர்மாவை வரவழைத்து தான் கண்ட காட்சியை அப்படியே வடிவமைக்கச் செய்தார். அதை மிக அழகிய அஷ்டாங்க விமானத்தின் கீழ்பிரதிஷ்டை செய்தார். அவரே கூடலழகர் எனப்பட்டார். இத்தலம்கிருதயுகத்தி லேயே அமைக்கப்பட்டு விட்டது. கிருதயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்களிலும் சிறப்புற்று விளங்குகிறது. எனவே இத்தல பெருமாள் யுகம் கண்ட பெருமாள்' எனப்படுகிறார்.

இங்குள்ள உற்சவர் "வியூக சுந்தர்ராஜன்' என்று அழைக்கப் படுகிறார். எந்த ஒரு செயலையும் செய்யும் முன்பு, சரியாக திட்டமிட்டு வியூகம் அமைத்து செயல் பட்டால் வெற்றி பெற லாம். இவ்வாறு எதிலும் வெற்றி தரும் அழகராக இவர் திகழ்வ தால், இப்பெயரில் அழைக் கப்படுகிறார். இப்பகுதியை ஆண்ட மன்னர்கள் போர் புரியச் செல்லும் முன்பு, இவரை வேண்டி வெற்றிக்காக வியூகம் அமைத்துக் கொண்டனர். இதனாலும் இப்பெயர் ஏற்பட்டதாகவும் சொல்வர்.

அஷ்டாங்க விமானத்தின் கீழ் தளத்தில் கூடலழகர் ஸ்ரீதேவி பூதேவியருடன் அமர்ந்த கோலத்தில் காட்சி தருகிறார். இரண்டாவது நிலையில், சூரிய நாராயணர் தேவியருடன் நின்ற கோலத்தில் அருளுகிறார். இதில் பிரம்மா, விஷ்ணு, சிவன் ஆகிய முப்பெரும் தெய்வங்களும், அஷ்டதிக் பாலகர்களும், ஓவிய வடிவில் அருளுகின்றனர்.

இதனால் இந்த சன்னதியை, "ஓவிய மண்டபம்' என்று அழைக்கி றார்கள். மூன்றாவது நிலையில் பாற்கடல் நாதர், பள்ளி கொண்ட கோலத்தில் தாயார்களுடன் அருளு கிறார்.

இவ்வாறு, பெருமாள் இத்தலத்தில் நின்ற, அமர்ந்த, கிடந்த என மூன்று கோலங் களிலும் காட்சி தருகிறார்.

மேலும் பூவராகர், லட்சுமிநரசிம்மர், நாராயணன், லட்சுமி நாராயணன், ஆழ்வார்கள், வைணவஆச்சாரியர் கள் ஆகியோரையும் விமானத்தில் தரிசிக்கலாம். மலைக்கோ யில்களில் பவுர்ணமியன்று கிரிவலம் போல், இங்கே பக்தர்கள் விமானத்தை வலம் வருகிறார்கள்.

ஒருமுறை மதுரையில் தொடர்ந்து மழை பெய்யவே, மக்கள் கடும் பாதிப்பிற்குள்ளாயினர். தங்களை மழையிலிருந்துகாத் தருளும்படி பெருமாளை வேண்டினர். அவர்களதுவேண்டுதலை ஏற்ற சுவாமி, நான்கு மேகங்களை ஏவினார். அவை, மதுரை யைச் சுற்றி நான்கு மாடங்களாக ஒன்று கூடி, மழையிலிருந்துமக் களை காத்தது. இவ்வாறு, நான்கு மேகங்கள் ஒன்று கூடியதால் இத்தலம், "நான்மாடக்கூடல்' என்றும், கூடல் மாநகர்' என்றும் பெயர் பெற்றது. சுவாமியும், "கூடலழகர்' என்று பெயர் பெற்றார். இந்த பெருமாள் "துவரைக் கோமான்' என்ற பெயரில் மதுரை தமிழ்ச் சங்கத்தில் புலவராக அமர்ந்திருந்ததாக பரிபாடல் கூறுகிறது. எனவே இவரை, "புலவர் கூடலழகர்' என்றும் சிறப் பித்துக் கூறுகிறார்கள்.

பாண்டிய மன்னர்களின் சின்னம் மீன். இந்த சின்னம்உருவா னதற்கு இத்தலத்து பெருமாளே காரணமாவார். முற்காலத்தில் இக்கோயிலைச் சுற்றி இருபுறத்திலும் மாலையிட்டதுபோல, வைகை நதி, கிருதுமால் நதி ஆகியவை ஓடின. இதில் கிருதுமால் நதிசுருங்கி ஓடையாகி விட்டது. பாண்டிய மன்னனான சத்தியவிரதன், இத்தல பெருமாள் மீது அதீத பக்தி செலுத்தினான். ஒரு முறை அவன் கிருதுமால் நதியில் நீராடிய போது, பெருமாள் மீன் வடிவில் தோன்றி உபதேசம் செய்தார். தனக்கு அருளிய சுவாமியின் நினைவாக மீன் சின்னத்தை வைத்துக்கொண்டான்.

பெருமாளின் 108 திருப்பதிகளுள் இதுவும் ஒன்று. உலகிலுள்ள அனைத்து பெருமாள் கோயில்களிலும் அதிகாலையில் பாடப்படும் "பல்லாண்டு பல்லாண்டு பல்லா யிரத்தாண்டு' என்ற "திருப்பல்லாண்டு' பாடல் இயற்றப்பட்ட தலம் மதுரை. இவ்வூரில் கூடலழகர் என்ற பெயரில் பெருமாள் அருளுகிறார். மார்கழி மாதத்தில் இத்தலத்தை தரிசிப்பது சிறப்பு.

திருமணத்தடை, குழந்தை பாக்கியம், கல்வியறிவிற்காக பிரார்த்தனை செய்கிறார்கள், இங்கு தாயாருக்கு பால்குடம் எடுத்து நேர்த்திக்கடன் செலுத்துகிறார்கள்.

பொதுவாக சைவ சமய கோயில்களில் மட்டுமே நவக்கிரக சன்னதி இருக்கும். வைணவ ஸ்தலமான இக்கோயிலில் நவகிரகங்களின் சன்னதி உள்ளது. ஒன்பது கிரகங்களையும் வணங்கும் விதமாக தசாவதார சுலோகம் உள்ளது.

கூடலழகர் கோவில் வேண்டுதல் ஸ்தலமாக திகழ்கிறது. கோவிலை 1 மண்டலம் அதாவது 48 நாட்கள் சுற்றி வந்து வேண்டிக் கொண்டால் நினைத்த காரியம் கைகூடும் என்பது பக்தர்களின் அசைக்க முடியாத நம்பிக்கை.



திருப்பதி ஏழு மலையின் சிறப்புகள்

1. வேங்கட மலை:

'வேம்' என்றால் பாவம், 'கட' என்றால் 'நாசமடைதல்'. பாவங் களைப் போக்கும் மலை என்பதால் இதற்கு 'வேங்கட மலை' என்று பெயர். இம்மலையில் வெங்கடாசலபதியாக (ஸ்ரீநிவாஸன்) மகாவிஷ்ணு காட்சி தருகிறார்.

2. சேஷ மலை:

பெருமாளின் அவதாரத்திற்காக ஆதிசேஷன் மலையாக வந்தார். இது ஆதிசேஷன் பெயரால் 'சேஷமலை' என்று அழைக் கப்படுகிறது.

3. வேதமலை:

வேதங்கள் இங்கு மலை வடிவில் தங்கி எம்பெருமானை பூஜித்தன. எனவே இது 'வேத மலை' எனப்பட்டது.

4. கருட மலை:

இங்கு சுவாமியை வணங்க வந்த கருடாழ்வார் வைகுண்டத் திலிருந்து ஏழுமலையை எடுத்து வந்தார். அத னால் இது 'கருட மலை' எனப் பெயர் பெற்றது.

5. விருஷப மலை:

விருஷபன் என்ற அசுரன், இங்கு சுவாமியை வணங்கி மோட்சம் பெற்றான். அவனது பெயரில் இது 'விருஷப மலை' எனப் பெயர் பெற்றது.

6. அஞ்சன மலை:

ஆஞ்சநேயரின் தாய் அஞ்சனை. தனக்கு குழந்தை பாக்கியம் கிடைக்க ஆதிவராகரை வேண்டி தவமிருந்தாள். அதன் பயனாக ஆஞ்சநேயரைப் பெற்றாள். இவளது பெய ரில் ஏற்பட்ட மலை 'அஞ்சன மலை' எனப்படுகிறது.

7. ஆனந்த மலை:

ஆதிசேஷன், வாயு பகவானுக்கிடையே போட்டி ஏற்பட்ட போது, மகாவிஷ்ணு நடுவராக இருந்தார். இருவரும் பலத்தில் சமமானவர்கள் என்று தீர்ப்பளித்தார். இதனால் வாயுவும் ஆதிசேஷனும் ஆனந்தம் அடைந்தனர். இதன் காரணமாக இது 'ஆனந்த மலை' என்று பெயர் பெற்றது.

காயத்ரி ஆவண தயாரிப்பு மையம்
ந.சிவராமகிருஷ்ணன்
பத்திர எழுத்தர்
அரசு உரிமம் எண்
A437/ TRP/1993
Cell : 98422 57449 / 99947 82295
7/22, கருணாநிதி நகர், சௌரிபாளையம், கோயமுத்தூர் - 641 028

D.தனபாலன்
பத்திர எழுத்தாளர்
பத்திரம் சம்பந்தப்பட்ட அனைத்தும் சிறந்த முறையில் செய்துதரப்படும்
மேற்கு ரதவீதி, அண்ணாசிலை அருகில், மானாமதுரை 630 606
செல்: 9842409829 / 9791944001

சீனியபிபா
டிம்பர் டிரேடிங்
மரம், ஓடு, கம்பி, சிமெண்ட், வியாபாரம்
சுதா ஏஜென்சிஸ்
வெளிநாட்டு மரம் இறக்குமதியாளர்கள்
S.நடராஜன்
தலைவர் ஸ்ரீ ஆனந்தவல்லி சோமநாத சுவாமி சாரிடபிள் டிரஸ்ட்
S.N.சுரேஷ்
செயலாளர் ஸ்ரீவீர அழகர் சாரிடபிள் டிரஸ்ட்
சீனியப்பா தியேட்டர் DIGITAL dts SURROUND
இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்
203, மெயின் ரோடு, மானாமதுரை. Cell: 98424 68620



கிரக தோஷங்களை நீக்கும் நவதிருப்பதி

இந்த வைணவத் திருப்பதிகளை "நவதிருப்பதிகள்" என்பர். ஒவ்வொரு திருப்பதியை வழிபட ஒரு கிரகதோஷம் நீங்கும் என்று சொல்வார்கள், தாமிரபரணிக்கு ஒரு விசேஷம் உண்டு. தன் இரு கரைகளிலும் ஏராளமான சிவ, விஷ்ணு தலங்களைக்கொண்டிருக்கும் திருநதி இது.

கங்கையைப் போல், காவிரியைப்போல் சமயப் பெருமை படைத்த நதியே தாமிரபரணியாகும். இதனை தட்சிண கங்கை என்று சொல்வதும் உண்டு.

தாமிரபரணி கரையோரத்தில் ஒன்பது சிவன்கோ யில்கள் உண்டு. அதை "நவ கயிலாயம்" என்பார்கள். நவகயிலாயத்துக்கு இணையாக ஒன்பது திருப்பதிகள் உண்டு. இந்த வைணவத் திருப்பதிகளை "நவதிருப்பதிகள்" என்பர். ஒவ்வொரு திருப்பதியை வழிபட ஒரு கிரகதோஷம் நீங்கும் என்று சொல்வார்கள்.

நவதிருப்பதிகளில் முதலாவது ஸ்ரீவைகுண்டம் இங்குள்ள மூலவர் ஸ்ரீவைகுண்டநாதன், உற்சவர் கள்ளப்பெருமாள், தாயார் முறையே வைகுந்த வல்லி, பூதேவி என்று சொல் லப்படுவார். ஆதிசேஷன் குடைபிடிக்க நின்ற திருக் கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். இது சூரியதோஷ நிவர்த்தி தலம்.

இரண்டாவது வரகுணமங்கை வீற்றிருந்த கோலத்தில் விஜயாசனப் பெருமாள் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கி றார். வரகுணவல்லி என்பது தாயாரின் பெயர். வரகுண மங்கை தாயார் உபயநாச்சியார். இந்தத் தலம் பரிகார தலமாகும்.

மூன்றாவது திருப்புளியங்குடி புஜங்க சய னத்தில் மூலவர் காய்சேன வேந்தன் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். மலாமகள் நாச்சியார், பூமகள் நாச்சியார் இவர் தேவியர். இது புதனுக்குரிய பரிகார தலமாகும்.

நான்கு, ஐந்தாவது தலங்கள் திருத்தொலைவில்லி மங்கலம் இதனை "இரட்டைத் திருப்பதி" என்பார்கள். இரண்டு பெருமாள் கோயில்கள் உண்டு. சீனுவாசன் (தேவபிரான்). அரவிந்தரோசனன் (செந்தாமரைக் கண் ணன்) ஆகிய இருவரும் முறையே நின்ற வீற்றிருந்த கோலங்களில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கின்றனர். இது ராகுகேது பரிகாரத் தலமாகும்.

ஆறாவது திருக்குளத்தை எனப்படும் பெருங்குளமாகும் இங்குள்ள சீனிவாசன் மற்றும் அரவிந்தரோசனன் நின்ற கோலத்திழல் சேவை சாதிக்கிறார்கள். அலமேலு மங்கை யார், குழந்தை வல்லி என்பன தாயார் திருநாமங்கள். இது சனி பரிகார தலம்.

ஏழாவது திருக்கோளூர்இங்கு வைத்தமானிதி பெருமாள்கோயிலில் வைத்திநிதி பெருமாள், நிஷேபவித் தன் புஜங்க சயனத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார்.

தாயார் குமுதவல்லி, கோளூர் வல்லி எனப்படுவர். இது செவ்வாய்க் குரியபரிகார தலமாகும்.

எட்டாவது தென்திருப்பேரை எனப்படும் இத்தலம் திருப்பொறை எனப்படுகிறது மகரநெடுங்குடை காதன் மற்றும் நிகரில் முகில்வண்ணன் வீற்றிருந்த கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். தாயார் முறையே குழக்காதவல்லி, திருப் பேறை நாச்சியார் எனப்படுவர். இது சுக்கிரன் பரிகார தலமாகும்.

ஒன்பதாவது திருத்தலம் திருக் குருகூர் எனப்படும் ஆழ்வார் திருநகரி யாகும் இது நம்மாழ்வார் அவதாரத் தலம். ஆதிநாதன், ஆதிப்பிரான், பொலிந்து நின்றபிரான் என்றெல் லாம் போற்றப்படும் பெருமாள் நின்ற திருக்கோலத்தில் கிழக்கு நோக்கி சேவை சாதிக்கிறார். ஆதிநாதவல்லி, குருகூர்வல்லி என்பன தேவியின் திருநாமங்கள். இது குரு பரிகாரத் தலமாகும்.

இந்த ஒன்பது ஆலயங்களிலிருந்து பெருமாள் கருட வாகனத்தில்எழுந் தருளி சேவை சாதிப்பது "நவகருட சேவை" என்பது விசேஷமாகச்சொல் லப்படும். திருநாங்கூர்கருடசேவை யைப் போல மிக விசேஷமானது நவகருட சேவையாகும். நவகருட சேவையை தரிசிக்க கிரகதோஷங்கள் அனைத்தும் விலகு தல் உறுதி என்பது அடியவர்கள் அனுபவித்தில் உணர்ந்த நம்பிக்கை களில் ஒன்றாகும்.

ஒரே இடத்தில் திருவண்ணாமலை, திருப்பதி

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து மூன்று கிலோ மீட்டர் தொலைவில் யானை கால் நீட்டிப் படுத்திருப்பது போன்ற தோற்றமுள்ள மலை மீது சீனிவாசப் பெருமாள் கோவில் அமைந்துள்ளது. இந்தக் கோவில் உள்ளூர், வெளியூர் மக்களால் திருவண்ணாமலை என்றே அழைக்கப்படுகிறது.

பல ஆண்டுகளுக்கு முன்பு ஒரு பக் தரின் கனவில், திருவண்ணா மலைக்கு கிழக்கே, கலசலிங்கம் ஐயனார் கோவில் அருகில் உள்ள ஊருணியில் ஒரு விநாயகர் சிலை உள்ளது. அதை எடுத்து வந்து பிரதிஷ்டை செய் " என உத்தரவு கொடுத்தார். அதன் பின் சாலியர்கள் சமுதாயத்திலிருந்து சென்று எடுத்து வந்து பிரம்மாண்டமான கோயில் கட்டி பூஜைகள் செய்து நிர்வாகித்து வருகின்றனர். விநாயகரின் உருவம் 12 அடி. அகலம் 8 அடி.

திருவண்ணாமலையின் அடிவாரத் தில் ஒரு தெப்பம் அமைந்துள்ளது. அது



கோனேரி என அழைக்கப் படுகிறது. முன்பு எல்லா விசேஷங்களுக்கும் இங் கிருந்துதான் தண்ணீர் எடுக்கப்பட்டது.

பிரகாரத்தின் வடமேற்கு மூலையில் பெருமாளுக்கு நேர்த்திக்கடனுக்காக



செய்து போட்ட பாதுகைகள் கிடக்கின்றன. அதை எடுத்து மார்பிலும், தோளிலும் அடித்துக் கொள்கிறார்கள் பக்தர்கள். தெரிந்தோ, தெரியாமலோ செய்த பாவங்களை மன்னித்து விடுவான் இறைவன் என்ற நம்பிக்கை.

ஸ்ரீனிவாசப் பெருமாளை ஆரத்தி எடுக்கும்போது பார்த்தால் பெருமாள் நம்மைப் பார்த்து புன்னகை புரிவது போல் தோன்றும். இவர் திருப்பதி பெருமாளை விட உயரம் அதிகம். மிகவும் கம்பீரமாக காட்சியளிக்கிறார்.

மலையின் இடையில் தாயார் அல மேலு மங்கை சன்னதியும் உள்ளது. சன்னதிக்கு வெளியே மலை யின் ஒரு பகுதியில் பெருமாள் பாதம் அமைக் கப் பட்டிருக்கிறது. இங்கு அவசியம் தரிசனம் செய்ய வேண்டும்.

அங்கு நின்று பார்த்தால் மேற்கு தொடர்ச்சி மலையின் எழில்மிகு தோற் றம் காணலாம். மலை ஏறும் வழியில் வேணுகோபால் சாமி திருக்கோவில் உள்ளது. ஆண்டாள் கோவிலுக்கு உட்பட்டது. திருப்பதிக்கு நேர்ந்துவிட்டு அங்கு செல்ல இயலாதவர்கள் இங்கு செல்லலாம். காணிக்கையைக்கூட இங்கேயே செலுத்தலாம்...



6.11.2026



ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன் / C.V.நடராஜன்
செல்: 9444228203

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்: 9994323622 / 9994162182

துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.

வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.





தட்சிண கைலாயம்

தமிழக கேரளா எல்லையில் உலகில் மிக பெரிய சிவலிங்கம்



கன்னியாகுமரி திருவனந்தபுரம் தேசிய நெடுஞ்சாலையில் நாகர்கோவில் அருகே தமிழக கேரளா எல்லையில் உள்ள களியக்காவிளை அருகே உதயார்றின்கர செங்கல் என்னுமிடத்தில் தட்சிண கைலாசம் மகேஸ்வரம் ஸ்ரீ சிவ பார்வதி கோவில் உள்ளது.

இக்கோவிலில் 112 அடி உயரம் கொண்ட ஆஞ்சநேயர் வழிபடும் மகா சிவலிங்கத்திற்கு மீண்டும் உலக அங்கீ காரம்: தட்சிண கைலாசம் மகேஸ்வரம் ஸ்ரீ சிவ பார்வதி கோவிலில் உலக சாதனை படைத்த உலகின் மிக உயரமான சிவலிங்கம் அமைந்துள்ள மகா சிவலிங்கம் மீண்டும் உலக அங்கீகாரம் பெற்றுள்ளது.

இது குளோபல் ரெக்கார்ட்ஸ் – ரிசர்ச் பவுண்டேஷனால் தேசிய சாதனையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அமைப்பின் நிர்வாகி கள் கோயிலுக்குச் சென்று விரிவாகச் சோதனை யிட்டனர். அங்கீகாரச் சான்றிதழை மாண்புமிகு சத்தீஸ்கர் வருவாய்த் துறை அமைச்சர் ஸ்ரீ டாங்க் ராம் வர்மா சுவாமி மகேஸ்வரானந்தா சரஸ்வத்திடம் வழங் கினார்.

குடும்பத்துடன் வந்திருந்த மாண்பு மிகு அமைச்சர் கோயில் மற்றும் சிவலிங்கத்தை தரி சித்துவிட்டு திரும்பி னார். மனித வாழ்வில் எங்கும் காண முடியாத அற்புதக் காட்சிகளும், 80 அடி உயரத்தில் வீற்றிருக்கும் மகா சிவலிங்கமும், அற்புதமான அனுமனும், இந்த மகா சிவலிங்கத்தையும் தவற விடுவது பெரும் இழப்பு என்றார். மேலும் பல பாராட்டுகளை வெல்வார் கள். இவ்விழாவில் கோவில் மேல் சாந்தி குமார் மகேஸ்வரம் கலந்து கொண்டார். இக்கோவிலில் விநாயகப் பெருமானின் 32 வடிவங்கள் இருக்கின்றன.

விநாயகப் பெருமான் தடைகளை நீக்குபவர், நல்ல ஆரம்பம் மற்றும் நல்ல அதிர்ஷ்டத்தின் கடவுள். வாழ்வின் பல்வேறு நிலைகளில்ஏற்படும் பல்வேறு பிரச்சனைகளில் இருந்து பக்தர்களைக் காப்பாற்ற விநாயகப் பெருமான் 32 வடிவங்களை மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோயிலில் நிறுவி வழிபடுகின்றனர்.

விநாயகனின் 32 வடிவங்கள்

- பால கணபதி (குழந்தை போல்)
- பக்தி கணபதி (பக்தர் வடிவம்)
- துண்டி கணபதி (கணபதியை தேடி)
- துர்கா கணபதி (அம்மா துர்காவைப் போன்றவர்)
- த்விஜ கணபதி (இரண்டு முறை பிறந்தவர்)
- த்விமுக கணபதி (இரண்டு தலைகளுடன்)
- ஏகதந்த கணபதி (ஒற்றைத் தந்தம்)
- ஏகாக்ஷர கணபதி (ஒற்றெழுத்து இறைவன்)
- ஹரித்ரா கணபதி (செல்வத்திற்காக)
- ஹேரம்ப கணபதி (அற்புதமான பாதுகாவலர்)
- க்ஷிப்ர கணபதி (விரைவாக அருள்பாலிக்கிறார்)
- க்ஷிப்ர பிரசாத கணபதி (விரைவான வெகுமதி)
- லட்சுமி கணபதி (அதிர்ஷ்டசாலி)
- மகா கணபதி (பிரபலமாக வழிபடப்படுகிறது)
- நிருத்ய கணபதி (நடனக் கலைஞர்)
- ரிணமோசன கணபதி (கடன்களில் இருந்து விடுவிப்பவர்)
- சங்கடஹர கணபதி (துக்கங்களைப் போக்குபவர்)
- சக்தி கணபதி (சக்தி வாய்ந்த வடிவம்)
- சித்தி கணபதி (புத்தியின் மாஸ்டர்)
- சிம்ம கணபதி (அச்சமற்ற)
- சிருஷ்டி கணபதி (படைப்பாளர்)
- கணபதி கேடட்கள் (இளைஞர்)
- திரிமுக கணபதி (மூன்று முகம்)
- த்ரயக்ஷர கணபதி (ஏயுஎம்ன் இறைவன்)
- உச்சிஷ்ட கணபதி (மேன்மையின் இறைவன்)
- உத்தண்ட கணபதி (தூர்மத்தை அமல்படுத்துபவர்
- ஊர்த்துவ கணபதி (உயர்ந்தவர்)
- வரத கணபதி (வரம் கொடுப்பவர்)
- விக்ன கணபதி (தடைகளின் அதிபதி)
- விஜய கணபதி (வெற்றி)
- வீர கணபதி (தைரியமானவர்)
- யோக கணபதி (யோக தோரணையில்)

மகேஸ்வரம் கோவிலில் விநாயகப் பெருமா னின் இந்த 32 வடிவங்களையும் சேர்த்து வழிபட் டால், ஒரு பக்தரின் வாழ்க்கையில் உள்ள தடைகள் நீங்கும்.

ஜோதிர்லிங்க தரிசன கோவில்

மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோயிலில் சிவபெருமானின் துவாதச (பன்னிரண்டு)ஜோ திர்லிங்கம், ஸ்ரீ சிவபார்வதியைச் சுற்றிலும், சுத்தம்பலத்தில் நிறுவப்பட்டுள்ளது. இந்தியா வில் பன்னிரண்டு வெவ்வேறு இடங்களில் பன்னிரண்டு ஜோதிர்லிங்கங்கள் உள்ளன.

இக்கோவில் ஒரே நேரத்தில் உலகின் மிக உயர்ந்த சிவலிங்கத்தையும், 32 விநாயக மூர்த்தங்களையும், 12 ஜோதிர்லிங்க தரிசனத் தையும் ஒன்றுசேர கிடைப்பதால் உலகம் முழுவதும் உள்ள பக்தர்கள் மகேஸ்வரம் ஸ்ரீ சிவபார்வதி கோவிலுக்கு துவாதச (பன்னிரண்டு) ஜோதிர்லிங்கத்தை ஒன்றாக வணங்குவதற்கு வருகை தருகின்றனர்.





அதிகாலையில் சுப்ரபாதம் கேட்டு கண் விழிக்கும் போக சீனிவாசர்

திருப்பதி கோயிலில் தினமும் அதிகாலையில் சுப்ரபாதம் கேட்டு கண் விழிக்கும் வெள்ளிப் பெருமாள் யார் தெரியுமா?

திருப்பதி ஏழுமலையானின் திருக்கோயிலில், மூலவர் பெருமாளுக்கு நிகரான பக்தி மரியாதையுடன் வழிபடப்படும் ஒரு சிறப்பு திருவுருவம் இருக்கிறது.

அது வேறு யாருமல்லஞ் வெள்ளியால் உருவாக்கப்பட்ட போக சீனிவாசர்!

வரலாற்று மரபின்படி, கி.பி. 614ஆம் ஆண்டில் திருப்பதி மூலவர் பெருமாளின் திருவுருவத்தை ஒத்த வகையில், வெள்ளியால் ஒரு பெருமாள் சிலை உருவாக்கப்பட்டது.

இந்த வெள்ளிப் பெருமாள் சிலையை உருவாக்கச் செய்தவர் சமவை என்னும் பல்லவ அரசி என்று கூறப்படுகிறது.

மேல் திருப்பதி கோயில் வளாகத்தில் உள்ள 8வது கல்வெட்டில், சமவை அரசியைப் பற்றிய



குறிப்புகள் இடம்பெற்றுள்ளதாகக் கூறப்படுகிறது.

அக்காலத்தில் இந்தப் பெருமாள் "மனவளப்பெருமாள்" என்ற பெயரால் அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

இன்று இவர் "போக சீனிவாசர்" என்று அழைக்கப்படுகிறார்.

"போகம்" என்பது இன்பம் அனுபவிப்பவர் என்ற பொருளைக் கொண்டது.

போக சீனிவாசர் சயன மண்டபத்தில் பட்டு மெத்தையுடன் எழுந்தருளியிருப்பதாக மரபு கூறுகிறது.

இன்னும் ஆச்சரியமான விஷயம் என்ன தெரியுமா?

இரவு நேரத்தில் வெள்ளி ஊஞ்சலில் துயிலும் போக சீனிவாசர், தினமும் அதிகாலையில் திருப்பதி ஏழுமலையானின் சுப்ரபாத சேவையைக் கேட்டு கண் விழிப்பதாகக் கூறப்படுகிறது.

அதாவது, திருமலையில் நடைபெறும் தினசரி வழிபாட்டு முறைகளில், போக சீனிவாசருக்கும் ஒரு தனிச்சிறப்பான இடம் இருப்பதாக பக்தி மரபில் பார்க்கப்படுகிறது.

பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் தொடரும் இந்த வழிபாட்டு மரபு, திருமலை திருக்கோயிலின் தொன்மையையும் அங்கு கடைப்பிடிக்கப்படும் தனித்துவமான ஆகம மற்றும் வழிபாட்டு முறைகளையும் நமக்கு நினைவூட்டுகிறது.

திருப்பதி செல்லும் பக்தர்கள் பெரும்பாலும் மூலவர் ஏழுமலையானை தரிசிப்பதில் கவனம் செலுத்துகிறோம்.

ஆனால், அவருக்கு அருகில் நடைபெறும் இந்த சிறப்பான தினசரி வழிபாட்டு மரபுகளுக்குப் பின்னாலும் பல நூற்றாண்டுகளின் வரலாறும் பக்தியும் இருப்பதை அறிந்துகொள்ளும்போது திருமலைத் தலத்தின் பெருமை இன்னும் ஆழமாகப் புரிகிறது.

அன்புடன் உலக மக்கள் அனைவரும்
ஆனந்தமாக வாழவேண்டும்
S.ஆனந்தகிருஷ்ணன்&கோ
மரம் ஒடு வியாபாரம் & சாமில்
SAK சீனியப்பா குரூப்ஸ் SAK



எங்களிடம் தரமான மரங்கள்
எங்களிடம் ஓரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை, பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம், நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம், ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும் மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது. மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.



SAK
மானாமதுரையில்
அதி நவீன வசதிகளுடன்
சீனியப்பா லாட்ஜ் A/C
SAK திருமண மஹால்



S.ஆனந்தகிருஷ்ணன்
செல்:98424 68256
A.குணா(எ)குணசீலன்
செல்:98428 68256
வாடிக்கையாளர்களுக்கு
இனிய தீபாவளி நல் வாழ்த்துக்கள்



172, பைபாஸ் ரோடு, மானாமதுரை,
9842868256

சென்னையில் 85 வது சத்யநாராயணா பூஜை கலந்து கொண்டால் கிடைக்கும் பலன்கள்



ஜஸ்வர்யா ஜாதகாலயா
கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர்

சென்னையில் 85 வது சத்யநாராயணா பூஜை கார்த்திகை பௌர்ணமி தினத்தில் வரும் நடைபெறுகிறத

சென்னை மேற்கு மாம் பலம் பகுதியில் உள்ள ஏஎம்ஆர் திருமண மண்டபம் அருகில் ஜஸ்வர்யா ஜாத காலயா சார்பில் மாதந்தோறும்வரும் பௌர்ணமி தினத்தில் அருள்மிகு ஸ்ரீ சத்ய நாராயணா பூஜை நடைபெற்றுவருகிறது. வரும் கார்த்திகை பௌர்ணமி தினத்தில் 85வது "ஸ்ரீ சத் திய நாராயணா பூஜை" நடைபெறுகிறது.

ஸ்ரீ விஷ்ணு பெருமாள் அவதரித்த பல அவதாரங் களுல் ஸ்ரீ சத்தியநாராயணர் அவதாரமும் ஒன்றா கக் கருதப்படும். பௌர்ணமி திதியில் (பௌர்ணமி நாளில்) ஜஸ் ஆம்வர்யா ஜாதகாலயத்தால், ஸ்ரீ சத்தியநாராயண சுவா மிக்கு ஸ்ரீ சத்தியநாரயண பூஜை நடத்தப்படவுள்ளது.

ஆகவே ஜஸ்வர்யா ஜாத காலயாவில் கார்த்திகை பௌர்ணமியைமுன்னிட்டு ஸ்ரீசத்திய நாரா யணா பூஜை மாலை 4.30 மணி முதல் நடைபெறும், நுழைவு கட்டணம் மற் றும் பிரசாதகட்டணம் எதுவும் இல்லை பல பக்தர்களும் ஜாதகாலயா ஜஸ்வர்யா நடத்தும் ஸ்ரீசத்தியநாராயண பூஜையில் பங்கேற் பதையும் வழக்கமாகக்கொண்டுள் ளனர். அனைத்து பக்தர்களும் எங் கள் வளாகத்துக்கு நேரில் கலந்து கொள் ளலாம், பக் தர்கள் வந்து பூஜையில் கலந்து பூஜையின் தொடக் கத்தில் சங்கல்பம் செய்ய வேண்டும் மற்றும் முழு பூஜையில் கலந்து கொள்ளவேண்டும்.

ஜாதகாலயா கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர் கூறியதாவது: இறைவனுக்கு அளிக்கப்படும் பிரசாதத் தை பக்தர்கள் எடுத்துக் கொள்வது மிக நல்லதொரு புண்ணிச் செயலாகவே கருதப்படுகி. ஸ்ரீ சத்யநாராயண பூஜை யில்பங்கேற்பதன் மூலம் பெரும்பாலான துன்பங்களுக்கு தீர்வு உண்டாகும்.

பூஜையில் கலந்து கொள்ள தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 9884141870 9884147630

பகைவர்கள் தொல்லை தீர்க்கும் வடபழனி ஆதிமூலப் பெருமாள்

வடபழனி முருகன் கோவிலுக்கு அருகில் 600 ஆண்டுகள் பழமையான பெருமாள் கோவில் உள்ளது. வேலவனுடன், மாமன் மாலவன் இருக்கும் கோவில்கள் தமிழகத்தில் பல உள்ளன.

அதில் வடபழனி ஆதிமூலப்பெருமாள் கோவில் மிக எளிமையானது. ஆலயத்தில் கருவறைக்குள், சூரியக் கதிர்கள் சென்று தினமும் சூரியபகவான் வணங்கியவாறு இருந்தது. தற்போது சில தடுப்புகளால் சூரியக் கதிர்கள் படுவதில்லை. அமர்ந்த திருக்கோலத்தில் இடது திருவடியை மடித்து வைத்து, வலது திருவடியைத் தொங்கவிட்டு தாமரை மலர் மீது வைத்தபடி அருள்கிறார்.

மேலும் சங்கு, சக்கரம் ஏந்தியும், வரத ஹஸ்த முத்திரையுடனும் புன்னகை மிளிர காண்போரை கவர்ந்திழுக்கும் தோற்றத்தில் இவர் வீற்றிருக்கிறார். இருபுறமும் நில மகளும், திருமகளும் இருந்து அருள் மழை பெய் கின்றனர்.

இங்கே உற்சவ மூர்த்தியாக கஜேந்திர வரதப் பெருமாள் பேரருள் புரிகிறார். எனவே இத்தலம், மகாவிஷ்ணுவின் கஜேந்திர மோட்சம் என்னும் புராணக்கதை தொடர்புடைய திருத்தலமாக கருதப்படுகிறது. மூலவருக்கு எதிரே பெரிய திருவடி என்று அழைக்கப்படும் கருட பகவான் வீற்றிருக்க, அர்த்த மண்டபத்தின் உள்ளே வடக்கு



நோக்கி சிறிய திருவடியான வரத ஆஞ்சநேயர் அருள்பாலிக்கிறார்.

தெற்கு சன்னிதியில் உடையவர், நம்மாழ்வார், திருமங்கை ஆழ்வார், மணவாளர், பாமா ருக்மணி சமேத கிருஷ்ணர் ஆகியோரின் திருவுருவங்கள் காணப்படுகின்றன. சுவாமி விமானத்துக்கு வலதுபுறம் தனிக் கோவிலில் விமானத்தின் கீழ் கருவறையில் அமர்ந்த கோலத்தில் ஆதிலட்சுமி தாயார் வீற்றிருக்கிறார்.

இந்த அன்னையின் உற்சவ மூர்த்தியாக பெருந்தேவி தாயார் இருக்கிறார். கோவில் வளாகத்தின் வட கிழக்குப் பகுதியில் பரந்து



விரிந்த பசுமையான அரசும் வேம்பும் இணைந்து இயற்கைச் சூழலை இதமாக்குகின்றன. இதுவே ஆலயத்தின் தல விருட்சமாக உள்ளது.

குழந்தைப் பேறு வழங்கும் சந்தான கோபாலன், வழக்குகளில் வெற்றி தரும் வழக்கறு தும்பிக்கை ஆழ்வார், தோஷங்கள் போக்க வல்ல கல்யாண சர்ப்பம், தாய்மார்களின் கருவினைக் காக்கும் கர்ப்பஸ்வபினி தாயார், குடும்ப பிரச்சினைகள் நீங்கி இனிமை நிலவ செய்யும் சல்லாப நாகங்கள் என்று பல மூர்த்தங்கள், அரசமரத்தடியைச் சுற்றிலும் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

எனவே நம் வாழ்வில் வரும் ஒவ்வொரு துயரங்களுக்கும் பரிகாரம் தரும் இடமாக இத்தலம் இருக்கிறது.

திருமணத்தடை விலக ஏற்ற பரிகாரத் தலம் என்று பகர்கிறார்கள். வயது அதிகரித்தும் திருமணம் கூடிவராத ஆண்களும், பெண்களும் இங்கே வந்து வழிபட்டு பரிகாரம் செய்து விட்டுச் செல்கிறார்கள். செவ்வாய்க் கிழமை தோறும் 16 வாரங்கள் நம்பிக்கையுடன் வர வேண்டும். முதல் வார செவ்வாய் அன்று 3 மாலைகளை வாங்கிவர வேண்டும். பெருமாள், தாயாருக்கு தலா ஒரு மாலையை அணிவித்து விட்டு, மூன்றாவது மலர் மாலையை திருமணத் தடையுள்ளவர்கள், தங்கள் கழுத்தில் அணிந்து கொண்டு 12 முறை வலம் வர வேண்டும்.

பிறகு ஒவ்வொரு செவ்வாயும் வந்து சேவித்து விட்டு, 16வது வார செவ்வாய் அன்று முதல் வாரத்தில் செய்தது போலவே மாலை யணிந்து சுற்றிவர வேண்டும். விரலி மஞ்சள் கிழங்கை மாலையாகக் கட்டி தாயாருக்கு சாற்றுவது மங்கல வாழ்வு தரும்.

வடபழநி ஆதிலெட்சுமி சமேத ஆதிமூலப் பெருமாள் கோவில், தினமும் காலை 6.30 முதல் 11.30 வரையிலும், மாலை 4.30 முதல் இரவு 8.30 வரையிலும் தரிசனத்துக்காக திறந்திருக்கும்.

உ
ஸ்ரீ ஒப்பிலியப்பன் துணை
ஸ்ரீமதே ராமானுஜாய நமஹ

ஐஸ்வர்யா ஜாதகாலயா
AISHWARYA JATHAKALAYA

திருமண தடை அகல, கடன் நிவர்த்தி பெற, காதல் பிரச்சனைக்கு தீர்வுக்காண, கணவன்-மனைவி பிரச்சனையிலிருந்து விடுபட, குழந்தை பாக்கியம் பெற, செய்யும் தொழிலில் மேன்மையடைய, நீதிமன்ற வழக்குகள் முடிவு பெற, அரசியல் மற்றும் கலைத்துறையினர் மேன்மையடைய, குடியை நிறுத்த, வெளிநாட்டு பயணம் தடை நீங்க, நஷ்டங்களை தவிர்க்க, அனைத்து தோஷங்களுக்கு ஜோதிடம் மூலம் பரிகாரங்கள், சகலமும் கைகூட மற்றும் நம் வாழ்கையில் ஏற்படக் கூடிய பல பிரச்சனைகளையும் எளிதில் தெரிந்துகொள்ளலாம், அதற்கு தீர்வும் காணலாம்.

ஜாதகம் கணித்து பலன் பார்க்கப்படும்

அடிப்படை ஜாதகம், பலன் | முழுநீள ஜாதகம், பலன் பிறந்தநாள் வருடப்பலன் | திருமண பொருத்தம் | முகூர்த்த தேதி மற்றும் நேரம் | திருமண தாமதம் | புத்திர பாக்கிய தாமதம் | கல்வி ஆலோசனை | உத்யோகம் மற்றும் தொழில் முடக்கம் | கடன் தொல்லை | வியாதி அவஸ்தை | ருண ரோக தோஷங்கள் | வீடுமனை யோகம் | அதிர்ஷ்டப் பெயர் சூட்டுதல் அதிர்ஷ்டம் தரும் கற்கள் | எண் கணிதப் பலன்

தொலை தூரத்தில் இருக்கும் அன்பர்கள், உலகில் எங்கு இருந்தாலும் ஆன்லைன் மூலமாக தொடர்புகொண்டு ஆலோசனைப் பெற்று, தீர்வும் காணலாம்

We Provide Astrological Services "Anywhere in the World" You can Contact:
Tamil, English, Hindi, Telugu. Kannada, Malayalam and more Languages



உங்கள் பிரச்சனைகளுக்கும் தீர்வு காண இன்றே சந்திப்பீர்
கே.எஸ்.ரவீந்திரன், வேத சாஸ்திர ஜோதிடர்
98841 41870 | 98841 47630
55, கவரை தெரு மேற்கு மாம்பலம், சென்னை-600 033
(A.M.R கல்யாண மண்டபம் அருகில்),

Mail ID: raviarchakar@gmail.com | Web Site: www.aishwaryajathakalaya.com
Our Youtube Channel: aishwaryajathakalaya

தமிழகத்தில் உள்ள பஞ்ச கிருஷ்ண தலங்கள்



தமிழகத்தில்கிருஷ்ணர் மூலவராக இருந்து அருள் தரும் முக்கிய தலங்கள் ஐந்து உள்ளது.

1. திருக்கண்ணங்குடி

இத்தலம் திருவாரூரில் இருந்து 18.0கி.மீல் உள்ளது. மூலவர் லோகநாதப் பெருமாள், தாயார் லோகநாயகி. வெண்ணெயில் இருந்து வெளிப் பட்டு கண்ணன் குடி அமர கண்ணன்குடி ஆனது.

2. திருக்கண்ணமங்கை

திருவாரூரில் இருந்து 6 கி.மீ. பிருகு முனி வரின் மகள் கண்ண மங்கையை கிருஷ்ணர் மணம் செய்த தலம்.

3. திருக்கோவிலூர்

விழுப்புரத்திலிருந்து 36 கி.மீ. மூலவர் திரிவிக்ரமர், தாயார் பூங்கோவல் நாச்சியார். மிருகண்டு முனிவருக்கு வாமனர் கோலத்தில் காட்சியளித்த தலம்.

4. திருக்கண்ணபுரம்

திருவாரூரிலிருந்து 19 கி.மீ. கண்வ முனிவ ருக்கு அதிசுந்தரனாக காட்சி நல்கியதால் கண்வபுரம் என்றாகி பின் கண்ணபுரம் என்றானது மூலவர் சவுரிராஜன் தாயார் ஸ்ரீகண்ணபுரநாயகி.

5. திருக்கபிஸ்தலம்

கும்பகோணம்த்திலிருந்து 15 கி.மீ. மூலவர் கஜேந்திர வரதர். தாயார் லோக நாயகி. கஜேந் திரன் என்னும் யானையை முதலையின் பிடியில் இருந்து காப்பாற்றிய தலம். ஆக இந்த ஐந்து தலங்களும் *பஞ்ச கிருஷ்ண தலங்கள்* என்றுப் போற்றப்படுகின்றன.